2022 மே 9]

என்பதை நேரடியாக வந்து கள ஆய்வு செய்து, அதன்பிறகு, நல்லதொரு தீர்வு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு காணப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 250, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

250—

பால் கொள்முதல் நிலையம்

***9663—திரு. ஆ. வெங்கடேசன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, பாலமேட்டில் பால் கொள்முதல் நிலையம் மற்றும் பால் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, பாலமேட்டில் பால் கொள்முதல் நிலையம் மற்றும் பாலிலிருந்து உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.*

முற்பகல் 11–20

திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலமேடு, மாணிக்கம்பட்டி, வெள்ளையன்பட்டி, மூடுவார்பட்டி, எர்ரம்பட்டி, தித்தூர் மேட்டுப்பட்டி, சேந்தமங்கலம், வளையப்பட்டி, பாரப்பட்டி மற்றும் தேவசேரி உள்ளிட்ட 30–க்கும் மேற்பட்ட கிராமங்களின் பிரதான தொழிலான பால் உற்பத்தி*

இந்தப் பகுதிகளில் அதிகமாக இருப்பதால், இந்தப் பகுதியில் cold storage மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலை அமைத்தால், சோழவந்தான் தொகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் பயனாக அமையும் என்பதால், அதை அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 5,00,000 லிட்டர் பால் கையாளும் திறன் உள்ளது. தற்போது ஒன்றியத்தின் மூலமாக 2,25,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதில் மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில் 77 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலமாக நாள் ஒன்றுக்கு சராசரியாக 19,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. பாலமேடு பகுதியிலிருந்து எம்.எஸ். 125 பாலமேடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக நாள் ஒன்றுக்கு 150 லிட்டர் பால் உற்பத்திச் செய்யப்பட்டு வருகிறது. சோழவந்தான் தொகுதியில் 3 பால் சேகர வழித்தட வாகனம்மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு 16,000 லிட்டர் பால் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதியிலுள்ள பாண்டியராஜபுரம், பொன்பெருமாள் கோவில் மற்றும் குலசேகரன்கோட்டை ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையங்கள்மூலம் தலா 5,000 லிட்டர் பால் சேகரம் செய்து, குளிரூட்டப்பட்டு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், இத்தொகுதிக்குட்பட்ட குட்லாடம்பட்டி, மாரியம்மன்குளம், மாணிக்கம்பட்டி ஆகிய கிராமங்களில் தலா 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையங்கள் அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் பால் உப பொருட்கள், பால் பவுடர், வெண்ணெய், நெய், பால்கோவா, பன்னீர் மற்றும் நறுமணப் பால் போன்ற பால் உப பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது. மேலும், மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து சோழவந்தான் தொகுதி,

2022 மே 9]

பாலமேடு 27 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்திருப்பதால் சோழவந்தான் தொகுதி, பாலமேட்டில் புதிதாக பால் கொள்முதல் நிலையம் மற்றும் பாலிலிருந்து உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்வதற்கு இவ்வளவு விளக்கம் தேவையா அமைச்சர். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.*

திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலமேடு பகுதி மக்களின் பிரதான தொழிலே பால் உற்பத்தித் தொழில்தான். அனைத்துத் தனியார் பால் கொள்முதல் நிலையங்களும் இந்தப் பகுதிகளில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இந்தப் பகுதியில் உற்பத்தியாகும் அனைத்து பாலையும் அரசு கொள்முதல் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்கிறீர்கள்.*

திரு. ஆ. வெங்கடேசன்: *இரண்டு, மூன்று* point*–களில் பால் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துப் பகுதிகளிலும் பால் கூட்டுறவுச் சங்கங்களை முறைப்படுத்திச் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்தால் சிறப்பாக இருக்கும் என்று கூறி, நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 150 லிட்டர் பால்தான் தினமும் வருகிறது; மிகவும் குறைந்த அளவு பால்தான் வருகிறது. எனவே அங்கே தனியாக ஒரு* Bulk Milk Cooler *அமைப்பது கஷ்டம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள் மேலும் மேலும் வலியுறுத்துகின்ற காரணத்தினால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு*

உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின்பேரில் நிச்சயமாக அங்கு அமைத்துத் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள பள்ளி, கல்லூரிகளில் சலுகை விலையில் ஆவின்மூலம் தயாரிக்கப்படக்கூடிய உணவுப் பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

251—

வகுப்பறைக் கட்டடம்

***26675—திரு. செ. சுந்தரராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?